**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 31.12.2021—ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : .12.2021 இராசிபுரம் நகராட்சி

பொருள்கள்

(1) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட பழைய பேருந்து நிலையக் கடை எண். 34 மற்றும் 35—ஐ 01.07.2016 முதல் 30.06.2025 முடிய எனது கணவர் திரு கு. புகழேந்தி என்பவர் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்தார். கடந்த 11.06.2021 அன்று இறந்துவிட்டதால் பழைய பேருந்து நிலையக் கடை எண். 34—ஐ அவரின் முதல் வாரிசுதாரரான திரு பு. சந்தோஷ் என்பவருக்கும் மற்றும் பழைய பேருந்து நிலையக் கடை எண். 35—ஐ அவரின் 2—ஆவது வாரிசுதாரரான திரு பு. பிரகாஷ் என்பவருக்கும் பெயர் மாற்றம் செய்துதர எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என குத்தகைதாரரின் மனைவி திருமதி சுமதி என்பவர் தடையின்மைச் சான்று வழங்கியுள்ளார்.

| வ. எண். | கடையினம் மற்றும் வரிவிதிப்பு எண். | தற்போதைய குத்தகைதாரர் பெயர் | பெயர் மாற்றம் செய்யப்படும் வாரிசுதாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | பழைய பேருந்து நிலையக் கடை எண். 34 | திரு கு. புகழேந்தி | திரு பு. சந்தோஷ் |
| 2 | பழைய பேருந்து நிலையக் கடை எண். 35 | திரு கு. புகழேந்தி | திரு பு. பிரகாஷ் |

எனவே, மேற்கண்டுள்ளவாறு பழைய பேருந்து நிலையக் கடை எண். 34—ஐ திரு பு. சந்தோஷ் என்பவருக்கும் மற்றும் பழைய பேருந்து நிலையக் கடை எண். 35—ஐ திரு பு. பிரகாஷ் என்பவருக்கும் பெயர் மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(4712/21/அ2)

**தீர்மானம் எண். 1196**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2021—22 (TURIP)—இன்கீழ் ரூ. 1000/— இலட்சம் மதிப்பிலான 10 சிப்பங்கள் பணிகளுக்கு 02.12.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் வெளியிடப்பட்டதற்கன விளம்பரக் கட்டண விவரங்கள் வருமாறு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | டெக்கான் க்ரானிக்கல் பப்ளிகேசன் | — | ரூ. | 34650.00 |
| 2) | தினத்தந்தி | — | ரூ. | 76250.00 |
| | மாநில சரக்கு மற்றும் சேவைவரி 2.5% | — | ரூ. | 2772.50 |
| | மத்திய சரக்கு மற்றும் சேவைவரி 2.5% | — | ரூ. | 2772.50 |

---------------------
ரூ. 116445.00
——————————

ரூ. 116455/– Turip திட்டப் பணியிலிருந்து " Flame Advertising Company " நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** ரூ. 116455/– விளம்பரக் கட்டணத்தினை Flame Advertising Company நிறுவனத்திற்கு Turip திட்டப் பணியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(3717/21/இ1)

**தீர்மானம் எண். 1197**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(3) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட தினசரி மார்க்கெட் கடை எண். 34–ஐ திரு கே. நடேசன் என்பவர் 01.04.2016 முதல் குத்தகைக்கு எடுத்து நடத்தி வருகிறார். 31.12.2021 வரை வாடகை பாக்கி ஏதுமில்லாமல் செலுத்தி தனக்கு கடை வேண்டாமென நகராட்சி வசம் ஒப்படைக்கிறேன் என விண்ணப்பத்தில் கோரியுள்ளார். மேற்படி கடையை ஏல நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 31.12.2021 வரை வாடகை பாக்கி ஏதுமில்லை. 1.1.2022 முதல் நகராட்சி வசம் எடுத்துக் கொள்ளவும் ஏலம் விடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(4546/21/அ2)

**தீர்மானம் எண். 1198**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–22–இன்கீழ் நவீன தினசரி அங்காடி மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண். 138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (NS) நாள் 27.12.2021–இல் ரூ. 243.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி (ரூ. 121.50 இலட்சம் KNMT பங்கு மற்றும் ரூ. 121.50 இலட்சம் நகராட்சி பங்கு) வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட அரசாணையில் KNMT 2021-22-ரூ.121.50/– இலட்சம் நகராட்சி பங்கு ரூ.121.50 இலட்சம் நகராட்சி பங்கு ரூ.121.50 இலட்சம் மொத்தம் ரூ.243.00–இலட்சம் மதிப்பீட்டில் தினசரி அங்காடி பணி மேற்கொள்ள மன்றம் பதிவு செய்யலாம்.

(3472/21/இ1)

**தீர்மானம் எண். 1199**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 295.55 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப் பணிகள் மேற்கொள்ள 08.12.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் வெளியிடப்பட்டதற்கன விளம்பரக் கட்டண விவரங்கள் வருமாறு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | தீக்கதிர் | – | ரூ. | 5745.00 |
| 2) | பைனான்சியல் எக்ஸ்பிரஸ் | – | ரூ. | 2550.00 |
| | மாநில சரக்கு மற்றும் சேவைவரி 2.5% | – | ரூ. | 207.38 |
| | மத்திய சரக்கு மற்றும் சேவைவரி 2.5% | – | ரூ. | 207.38 |
| | | | ரூ. | 8709.76 (அ) 8710/– |

ரூ. 8710/– விளம்பரக் கட்டணத்தினை கலைஞர் நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து Flame Advertising Company நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** ரூ. 8710/– விளம்பரக் கட்டணத்தினை Flame Advertising Company நிறுவனத்திற்கு கலைஞர் நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(3707/21/இ1)

**தீர்மானம் எண். 1200**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(6) AMRUT 2.0 திட்டத்தின்கீழ் நகராட்சிகளில் அமைந்துள்ள ஏரிகள், குளம், குட்டை, குடிநீர் திட்டத்தின் தலைமை நீரேற்று நிலையம், நீர் உந்து நிலையம், மேல்நிலைத் தொட்டிகள், ஆற்றுப்படுகை மற்றும் பாதாள சாக்கடைத் திட்டத்தின்கீழ் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், நீரேற்று நிலையங்களின் புகைப்படங்களை Aerial View-இல் எடுத்து மின்னஞ்சலில் அனுப்பக் கோரப்பட்டுள்ளது. மேற்படி புகைப்படங்கள் எடுக்கப்பட்டு பணி முடித்ததற்கான செலவுத் தொகை ரூ. 15800/–ஆகும். புகைப்படங்கள் Aerial View-இல் எடுத்து பணி முடித்ததற்கான செலவுத் தொகை ரூ. 15800/– குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(3134/21/இ2)

**தீர்மானம் எண். 1201**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு தூய்மைப் பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள், துப்புரவு பணிக்குத் தேவையான தளவாட சாமான்கள் மற்றும் கொரோனா நோய் தடுப்பிற்குத் தேவையான கிருமிநாசினிகள் கீழ்கண்டவாறு தேவைப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) கருப்பு பினாயில் | – | 9000 லிட்டர் |
| 2) ஆசிட் | – | 1300 லிட்டர் |
| 3) காலணி | – | 83 ஜோடிகள் |
| 4) மழைகோட் | – | 83 எண்ணிக்கை |
| 5) ஒளிரும் சட்டை | – | 83 எண்ணிக்கை |
| 6) பிக்காஸ் | – | 25 எண்ணிக்கை |
| 7) தென்னந்துடப்பம் | – | 1000 எண்ணிக்கை |
| 8) மூங்கில் மலாரம் | – | 350 எண்ணிக்கை |
| 9) சாக்கடை சுரண்டி | – | 100 எண்ணிக்கை |
| 10) நான்கு பல் கொக்கி | – | 100 எண்ணிக்கை |
| 11) Large Fork with fork handle | – | 100 எண்ணிக்கை |
| 12) Small fork with form handle | – | 100 எண்ணிக்கை |
| 13) அலுமினியக் கூடை | – | 200 எண்ணிக்கை |
| 14) குப்பை அகற்றும் கை சுரண்டி | – | 200 எண்ணிக்கை |
| 15) அரிவாள் | – | 50 எண்ணிக்கை |
| 16) Hand wash liquid | – | 192 எண்ணிக்கை |
| 17) மருத்துவ கழிவுகள் அகற்ற yellow bag | – | 1500 எண்ணிக்கை |
| 18) லைசால் கிருமிநாசினி | – | 2000 எண்ணிக்கை |
| 19) Hand sanitizer | – | 120 லிட்டர் |
| 20) மூன்று அடுக்கு முகக்கவசம் | – | 72000 எண்ணிக்கை |
| 21) சுண்ணாம்பு | – | 144 டன் |
| 22) பிளீச்சிங் பவுடர் (34%) | – | 20 டன் |
| 23) பாதுகாப்பு முகக்கண்ணாடி கவசம் | – | 200 எண்ணிக்கை |

மேற்கண்டவாறு 1 வருடத்திற்குத் தேவையான பொருட்கள் அவ்வப்போது தேவைக்கேற்ப வாங்கிக் கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளிக் கோரவும், உத்தேச செலவினம் பொது நிலையை அனுசரித்தும் செயல்படுத்திட தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) ஒப்பந்தப்புள்ளி கோரவும், பொது நிலையை அனுசரித்து தேவைக்கேற்ப அவ்வப்போது வாங்கிக் கொள்ளவும் தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2) உத்தேச செலவினம் பேரிடர் மேலாண்மை நிதி, திடக்கழிவு மேலாண்மை நிதி அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

**(4699/22/எச்1)**

**தீர்மானம் எண். 1202**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(8) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தூய்மை பாரத திட்டத்தின்கீழ் City Sanitation Action Plan, Solid Waste Management Action Plan மற்றும் நுண்ணுரம் செயலாக்க

மையங்களின் வரைபடம் தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. அவசர அவசியம் கருதி உடன் சமர்ப்பிக்க இராசிபுரம் நகராட்சி துப்புரவு ஆய்வர் திரு பி. சிவா அவர்களின் மூலம் வரைபடம் தயார் செய்து பிரிண்ட் செய்த வகையில் பில்படி ரூ. 7994/—ஐ திருப்பி வழங்க தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்படி செலவுத் தொகை ரூ. 7994/—ஐ திரு பி. சிவா, துப்புரவு ஆய்வருக்கு திருப்பி வழங்கவும், நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளவும் தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(3909/21/எச்1)

**தீர்மானம் எண். 1203**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(9) இராசிபுரம் நகராட்சி, வார்டு எண். 20, ராம் நகர் பகுதி, ஏரிக்கு வடக்கு பிளாக் 1—இல் குடிநீர் பகிர்மான குழாயில் அடைப்பு ஏற்பட்டுள்ள காரணத்தால் அந்தப் பகுதிக்கு செல்லும் பகிர்மான குழாயினை மாற்றி அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 320000/—ஐ குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(4868/21/இ2)

**தீர்மானம் எண். 1204**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(10) இந்நகராட்சிப் பணியாளர்களின் சேமநலநதி சந்தாத் தொகைக்கு 2020—2021—ஆம் ஆண்டு வட்டித் தொகை கணக்கீடு செய்து உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு அனுப்ப தணிக்கையாளர்களிடம் விலைப்புள்ளி பெற்று மேற்காணும் பணியினை மேற்க்கொள்ளவும் அதற்காகும் உத்தேச மதிப்பீடு ரூ. 50000/— மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்க்காணும் பணியாளர்களின் நலன் கருதி உடனடியாக செய்து முடிக்க வேண்டியிருப்பதால் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதற்கு மன்றம் ஏற்கலாம்.

(4900/21/பி2)

**தீர்மானம் எண். 1205**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(11) இராசிபுரம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிலுள்ள SHARP Xerox Machine M x M 464W மற்றும் SHARP Copier 6020NV ஆகியவைகளுக்கு இரண்டு டோனர்கள் வழங்க பெறப்பட்டுள்ள விலைப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) Spyder Technology, 153, Suramangalam Main Road, Salem-5 - Rs. 24400/-
2) Raj Computers, 13, Awaiyar Street, Suramangalam, Salem-5 - Rs. 25500/-
3) Chandra Hi Tech, 209, Periyar Nagar, Erode -1 - Rs. 26500/-

வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் வழங்கியுள்ள M/s. Spyder Technology நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க்கவும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**(4144/21/இ1)**

**தீர்மானம் எண். 1206**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**( 12 )** இராசிபுரம் நகராட்சி இறைச்சி வதைக்கூடம் (Slaughter House) உணவு பாதுகாப்பு மற்றும் தாங்கள் சட்டம் **2006**–இன்படி இந்திய உணவு பாதுகாப்பு ஆணையத்தில் **12421014000195**–இல் உரிமம் பெறப்பட்டுள்ளது. மேற்படி உரிமம் **5.3.2022**–ஆம் தேதியுடன் காலாவதியாவதால் மீண்டும் உரிமம் புதுப்பிக்கவும், உரிமத் தொகை ரூ. **2500/**– உத்தேச செலவினத்தில் மேற்கொள்ளவும் தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : 1)** தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று உரிமம் புதுப்பிக்க தொகை செலுத்தியதை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
**2)** உத்தேச செலவினம் ரூ. **2500/**– நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

**(2930/17/எச்1)**

**தீர்மானம் எண். 1207**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– ர. அசோக்குமார்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி